## கண்டி ஆஸ்பத்திரியில் மருந்து தட்டுப்பாடு இலங்கைவானொலிச் செய்திக்கு மறுப்பு

கண்டி பெரியாஸ்பத்திரியில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இலங்கை வானொலி தனது செய்தி அறிக்கையில் அண்மையில் தெரிவித்ததை கண்டி ஆஸ்பத்திரி நிர்வாகம் மறுத்துள்ளது. சில தினங்களுக்கு முன்னர் இச் செய்தி ஒலிபரப்பப்பட்டது. நேற்று இச் செய்தி தவறு என்றும் கண்டி ஆஸ்பத்திரியில் போதிய மருந்து வகைகள் உண்டு என்றும் இலங்கை வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## சீக்கிய தீவிரவாதிகளுக்கு எதிராக இந்தியாவும் பிரிட்டனும் ஒப்பந்தம்

இந்தியாவுக்கு எதிராக சீக்கிய தீவிரவாதிகள் பிரிட்டனில் இருந்து செயற்படுவதைத் தடுக்க பிரிட்டனும் இந்தியாவும் புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்யவுள்ளன. பிரிட்டிஷ் வெளியுறவு அலுவலக அமைச்சர் இறிஸ்டன் ஹாரல்ட் ஜோன்ஸ் காமன் சபையில் இதனைத் தெரிவித்தார். சீக்கியர்கள் பிரிட்டனில் நிதி சேகரிப்பதைத் தடுக்கவும் இந்த ஒப்பந்தம் வழி செய்கிறது. ஸ்கொட்லன்ட் பொலிஸார் பல சீக்கிய தீவிரவாதிகளை பிரிட்டனில் கைது செய்துள்ளதாகவும் அவர் சொன்னார்.


பக்கங்கள் நான்கு · விலை ரூபா: 5 - 00

# முரசொலி

6 ஒலி 04 பிரஜோற்பத்தி கார்த்திகை 15 ( 01 . 12 . 1991 ) ஞாயிறு


## வடபகுதிக்கு பதிவுத் தபால்களை ஏற்க கொழும்பு தபாலகங்கள் மறுப்பு

கொழும்பிலுள்ள சில தபாற் கந்தோர்கள் வடபகுதிக்கு பதிவுத்தபால்களை ஏற்றுக்கொள்ள மறுப்புத்தெரிவித்துள்ளன. தபாற் கந்தோர் கருமபீடங்களில் வடபகுதிக்குரிய பதிவுத்தபால்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என்ற சுலோக அட்டையும் தொங்க விடப்பட்டுள்ளது. பதிவுத்தபால் மூலம் சைக்கிள் போல்ஸ், மொலிந்தின் கடதாசி பெல்டோச் பற்றரி என்பன அனுப்பப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தபால் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் இது தொடர்பான சுற்று நிருபமும் தபாற் கந்தோர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (06)


நல்லூர் கிளை நூலகம் 1991


### .க்களப்பு கொடுவாமடுப் பகுதியில்

# .லிகளின் திடீர்த் தாக்குதல்

# 12 இராணுவத்தினர் பலி!

### பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

மட்டக்களப்பு மாவட்டத்தி உள்ள கொடுவாமடுப்பகுதியில் விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், பல சிப்பாய்கள் காயமடைந்தனர். பல ஆயுதங்களும் புலிகளால கைப்பற்றப்பட்டன. பாதுகாப்பு அமைச்சும் இதனை ஒத்துக்கொண்டுள்ளது.

...லடிக்கு நேற்று முன் ...ரோந்து சென்று ...ண்டிருந்த போது கொடு...வாமடுப் பகுதியில் வைத்து ...லைப்புலிகள் திடீர் ...குதல் தொடுத்தனர். ...ார் ஒன்றரை மணிநேர இடம்பெற்ற இத்தாக்கு...தலையடுத்து இறந்த சகாக்களின் உடல்களையும் எடுத்துக்கொண்டு படையினர் முகாம் திரும்பினர் பல சிப்பாய்களும் இச்சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

அதிகளவில் ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன,

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம்:-

- ஏ. கே. எல். எம், ஜி-1
- ஏ கே.எல்.எம்,ஜி-ரவைகள்
- ரி 56 ரக துவக்கு - 1
- ரி, 56. 1ரக துவக்கு - 2
- ரி 56. 2ரக துவக்கு - 2
- இவற்றுக்குரிய ரவைக் கூடுகள்


— 04ஆம் பக்கம் பார்க்க


### ...ிவடக்கில் நேற்று மாலை

## பொம்மர்கள் குண்டு வீச்சு புலிகளும் எதிர்த்தாக்குதல்

## ஹெந்தல் கப்பல் மூலம் வடக்கே மா எடுத்துவரப்படும்

ஹெந்தல் என்ற கப்பல் யாழ் மாவட்டத்துக்கு மாவை திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு ஏற்றிவர வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது.

இக்கப்பல் சில வாரங்கள் பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இக்கப்பல் பருத்தித்துறையில் மா இறக்கும் பணியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (06

## சார்க் உச்சி மாநாடு டிசம்பர் 21இல் நடைபெறும்

சார்க் உச்சிமாநாடு இம்மாதம் 21ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முதலில் இந்த அமைப்பில் உள்ள ஏழு நாடுகளினதும் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அகதிகளுக்கு குடிசைகள் நிறுவ 10 மில்லியன் ரூபா உதவி

## மட்டக்களப்பில் இராணுவ நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தின்சில பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறுவதாக கூட்டுப்படைத்தலைமையகம் அறிவித்துள்ளது. இச்சம்பவத்தில் படையினர் தரப்பிலும் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### வீரமரணம்

லெப். மாதவன், 2 ஆம் லெப். றோயல் சுதன் ஆகிய போராளிகள் கொடுவாமடுத் தாக்குதலில் வீரமரணமடைந்தனர்.

காஞ்சிப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் அம்பாறை மட்டுநகர் மாவட்டத்தளபதி லெப். கேணல் ஜோய் வீரமரணமடைந்தார்.

## ஆஸ்பத்திரி ஊழியர் வேலைநிறுத்தம்

நாட்டில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் தாதிகள் உட்பட சில ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி இன்று முதல் தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்கவுள்ளனர்.

சம்பள உயர்வு மற்றும் சில கோரிக்கைகளை முன்வைத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

## கடவுச்சீட்டுகளும் வந்தன

கொழும்பிலிருந்து இம்முறை கப்பலில் வந்த தபால் பொதிகளில் குறைந்தளவு கடவுச் சீட்டுக்களும் வந்து சேர்ந்துள்ளன. 06

## புலிகளும் எதிர்த்தாக்குதல்

நீண்ட நாள்களுக்கு பின் ...னர் குப்பிளான், கட்டுவன், ...வசாவிளான் பகுதிகளில் நேற்று மாலை இரு குண்டு ...வீச்சு விமானங்கள் பல தட...வைகள் தாக்குதல்களை மேற்...கொண்டன.

இதேநேரம் கட்டுவன் மினி ...ராணுவ முகாமில் இருந்து ...யிருப்புக்களை நோக்கி ...டயினர் துப்பாக்கி பிர...கம் செய்தனர்.

...ரம்மர்கள் தாக்குதல் ...த்தியபோது விடுதலைப் புலிகளும் விமான எதிர்ப்பு பீரங்கித் தாக்குதல்களை தொடர்ந்ததையடுத்து பொம்மர்கள் அவ்விடத்தைவிட்டுச் சென்றன

இதனையடுத்து பலாலி இராணுவ முகாமிலிருந்து இப்பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. (21,6,7)

## காரைநகரில் இருந்தும் படையினர் தாக்குதல்

நேற்று முற்பகலும் நேற்று முன்தின மிரவும் காரைநகர் வலந்தலையிலிருந்து படையினர் மூளாய், பொன்னாலை, திருவடிநிலை போன்ற பகுதிகளை நோக்கி இரண்டாவது நாளாகவும் ஷெல் தாக்குதல்களையும், துப்பாக்கிப்பிரயோகத்தினையும் மேற்கொண்டனர்.

மூளாய்பகுதியில் சில வீடுகள் சேதமுற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க

...ழ் அரசாங்க அதிபரால்

## தாண்டாவின் கடிதம் மாத்தயாவிடம் கையளிப்பு

...தலைப்புலிகளுக்கு ...ச்சர் தொண்டமான் ...ய பதில் கடிதம் யாழ் ...ங்க அதிபர் க மாணிக்கவாசகர் மூலம் யாழ்ப்பா...அனுப்பிவைக்கப்பட்டுள்ள

...ாழும்பிலிருந்து நேற்று ...தினம் யாழ்ப்பாணம் திரும்பிய அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் இக்கடிதத்தை கொண்டு வந்துள்ளார்.

இக் கடிதம் விடுதலைப்புலிகளின் பிரதித்தலைவர் மாத்தயாவிடம் யாழ் அரசாங்க அதிபரால் நேற்று கையளிக்கப்பட்டது. 07, 06

## அகதிகளுக்கு குடிசைகள் நிறுவ 10 மில்லியன் ரூபா உதவி

யாழ் மாவட்டத்தில் அகதிகளுக்கு குடிசைகள்' அமைக்க 10 மில்லியன் ரூபாவை புனர்வாழ்வு அமைச்சு வழங்கியுள்ளது.

குருநகரில் உள்ள உணவுக் களஞ்சியத்தை திருத்தியமைக்க மூன்று மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்து தங்கியுள்ளவர்களுக்கு இந்த நிதி மூலம் குடிசைகள் அமைக்கப்படவுள்ளன. (06)

## 3 ஆம் தர சிற்றூழியருக்கு பதவி உயர்வு வழங்க மகஜர்

யாழ் செயலகத்தில் சிற்றூழியர் தரம் மூன்றில் நியமனம் பெற்று பதினொரு வருடங்களாகச் சேவையாற்றி வரும் சிற்றூழியர்கள் சிற்றூழியர் தரம் இரண்டிற்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் விண்ணப்பங் கோரப்பட்டபோது விண்ணப்பித்து 05-08-1989 இல் கொழும்பு சென்று நேர்முகப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

முறை கப்பலில் வந்த தபால் பொதிகளில் குறைந்தளவு கடவுச் சீட்டுக்களும் வந்து சேர்ந்துள்ளன. 06

## தற்கொலை

புற்றுநோயினால் ஏற்பட்ட கஷ்டத்தைப் பொறுக்க முடியாத செல்வி சத்தியபாமா சத்தியவான் (25) என்னும் இளம் பெண் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கிணற்றுக்குள் குதித்து தற்கொலை செய்துள்ளார். 18

## ஓய்வு பெற்றவருக்கு

யாழ் போதனா வைத்தியசாலையில் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றுச் சென்ற பரிசாரகர் ஒருவர் கன்சிகிச்சைப் பகுதியில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் கடமைபுரிகிறார். (07)

## சவச்சாலை குளிரூட்டிகள் பழுதடையும் நிலையில்

யாழ் பெரியாஸ்பத்திரியின் சவச்சாலையில் உள்ள பிரேதங்களைப் பாதுகாக்கும் குளிரூட்டிகள் பழுதடையும் நிலையில் உள்ளது

1990 ஜூன் மாதம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதையடுத்து இங்குள்ள ஆறு குளிரூட்டிகளும் இயங்காமல் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது வழங்கப்பட்டு வரும் 55 ஹெஸ் டீசல் மின்சாரம் இவற்றை இயக்கப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## செஞ்சிலுவை லொறிமோதி குடும்பப் பெண் பலி

நேற்றுக் காலை நவிண்டில் இரும்பு மதவடியில் இடம் பெற்ற லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் பலியானார்.

இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி குணரத்தினம் (39) என்பவரே யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்

— 04 ஆம் பக்கம் பார்க்க

★ திருமலை பிரட்றிக் கோட்டை, கண்ணகிபுரம் பகுதிகளிலுள்ள

# கோணேஸ்வரர் ஆலய காணிகள் சிங்களவர்க்கு பகிர்ந்தளிப்பு!

## தமிழர்கள் ஆலயவழிபாட்டுக்கும் செல்ல முடியாநிலை

திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் சிங்கள மக்கள் தற்பொழுது குடியேற்றப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருமலை கண்ணகிபுரம், பிரட்றிக் கோட்டை அமைந்துள்ள கோணேஸ்வரர்மலைப் பகுதி ஆகியவற்றிலுள்ள ஆலயக் காணிகளே சிங்கள மக்களுக்கு தற்பொழுது பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

இதே வேளை கோணேஸ்வரர் ஆலயத்துக்கு தமிழ் மக்கள் தற்பொழுது பாதுகாப்பாகச் சென்று வழிபட முடியாத நிலை உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே போன்று திருமலை மாவட்டத்தில் கந்தளாய், சேருவில, தெஹிவத்த, நிலாம்பொல, சேறமபுர, அலிஒலுவ, மகிந்தபுர, கடவானை, மதவியா, மொரவேவ, பன்குளம் கிராமங்களில் மேலும் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். (08)

## விஷ சாராயம் அருந்தி குஜராத்தில் 22 பேர் பலி!

இந்தியாவில் விஷசாராயம் அருந்துதலும், அதனால் மரணங்கள் சம்பவிப்பதும் தொடர்ந்து கொண்டேயுள்ளது.

நேற்று முன்தினம் குஜராத்தில் நடந்துள்ள மற்றொரு சம்பவத்தில் விஷ சாராயம் அருந்திய 22 பேர் பலியானார்கள், 200 பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விஷ சாராயம் அருந்திய மேலும் பலர் தற்பொழுது வைத்தியசாலைக்கு எடுத்து வரப்படுவதாகவும் இவர்களில் பலர் கண் பார்வையை இழக்கும் நிலையிலிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## காடுகளில் மக்கள் கிராமங்களில் இராணுவம்

கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக அப்பகுதியில் 185 விவசாயக் குடும்பங்கள் இடம்பெயர்ந்து காட்டுப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இவர்கள் தற்போது திருக்கோயில், தம்பிலுவில் போன்ற பகுதிகளுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

வீரமுனையில் இருந்தும் இடம்பெயர்ந்த தமிழ்க் குடும்பங்களும் திருக்கோயிலில் வசித்து வருகின்றனர். இக்குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை அப்பகுதிகளில் இராணுவம் முகாம் அமைத்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (08)

## இசை ஆசிரியர் விவரம் சேகரிப்பு

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் இசை, நடனத்துறைகளில் ஆசிரியபயிற்சி பெற்ற ஆசிரியர்களின் விவரங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் பொ. தெய்வேந்திரன் யாழ் மாவட்டத்திலுள்ள அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். 18

## பரீட்சை உத்தியோகத்தர்களுக்கு நியமனக்கடிதம் கிடைக்கும்

எதிர்வரும் டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைக்கான உத்தியோகத்தர்களது நியமனக் கடிதங்கள் 2 ஆம் திகதி திங்கட்கிழமை கிடைக்கவுள்ளன.

இப்பரீட்சைக்கான கடமைகளில் ஈடுபடுவதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட இணைப்பு உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு உத்தியோகத்தர்கள், மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக்கடிதங்கள் பெரும்பாலும் திங்கட்கிழமை உரியவர்களுக்குக் கிடைக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது (18)

## புதிய அபிவிருத்தித் திட்டம அடுத்த வருடம் முதல் அமுலாகும்

புதிய அபிவிருத்தித் திட்டமொன்றை அரசு அடுத்த வருடம் முதல் அமுலுக்குக் கொண்டுவரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக, கைத்தொழில், பொருளாதார அபிவிருத்திக்கென புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டம் பற்றிய பூரண விவரங்கள் டிசம்பர் இறுதிக்குள் அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கோபாலசாமியை கைது செய்ய இந்திரா காங்கிரஸ் கோரிக்கை!

திராவிட முன்னேற்றக்கழக ...ரனை பிணையில் விட சென்னை நீதிபதி சித்திக் ...வும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 10 கோடிக்கும் அதிகமான சிறுவர்கள் அனாதையாகும் நிலை!

உலகில் பத்துக்கோடி மக்கள் மனித நோய் எதிர்ப்புச் சக்தியை அழிக்கும் வைரசு கிருமியினால் தாக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்கள் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இவர்களில் 500, 000 பேர் எயிட்ஸ் நோயினால் இந்த ஆண்டு இறுதிக்குள் பாதிக்கப்படுவார்கள் என்றும் இத் தொகையில் 200, 000 பேர் பெண்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற் கூறப்பட்ட வைரஸ் கிருமிகள் கர்ப்பிணிகளையே அதிகம் தாக்குவதாகவும் இதன் காரணமாகப் பிறக்கும் குழந்தைகளின் மரண விகிதம் கூடுதலாக உள்ளதெனவும் அவ்வறிக்கை கூறுகிறது. இந்த வைரஸின் தாக்குதலுக்குள்ளான கர்ப்பிணிப் பெண்கள் சீக்கிரம் மரணத்தைத் தழுவுவதால் பிறக்கும் குழந்தைகள் அனாதைகளாகின்றனர். பத்துக் கோடிக்கும் அதிகமான சிறுவர்கள் அனாதைகளாகும் நிலை உருவாகும்.

சமுதாயத்திலும், குடும்பத்திலும் பெண்கள் கொண்டுள்ள ஈடுபாடும் பங்களிப்பும் மனித நோய் எதிர்ப்புச் சக்தியை அழிக்கும் வைரசு கிருமிகளின் தாக்குதலுக்கு அரணாக நேரிடுகிறது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ இன்று உலக எயிட்ஸ் தினம்

## 98 அரச நிறுவனங்கள் இந்தியாவில் நஷ்டத்தில்!

இந்தியாவின் 98 அரச நிறுவனங்கள் தற்பொழுது நஷ்டத்தில் இயங்கி வருவதாக இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நஷ்டத்தில் இவை தொடர்ந்தும் இயங்கி வருவதினால் மேலதிக நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காக அவற்றை மூடிவிடுவது குறித்து இந்திரா காங்கிரஸ் அரசு ஆலோசித்து வருகின்றது.

## இந்தியபிரிவினை போராளிகளுக்கு பாகிஸ்தானில் 13 இடங்களில் பயிற்சி

இந்திய அரசுக்கு எதிராகப் போராடும் பிரிவினைவாதிகளுக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவதற்கென பாகிஸ்தானில் 13 விசேட பயிற்சி நிலையங்கள் இயங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பயிற்சி முகாம்களில் இந்திய சீக்கிய மற்றும் முஸ்லிம் பிரிவினைவாத போராளிகளுக்கு பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளினால் ஆயுதப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

பாகிஸ்தானின் உளவு ஸ்தாபனமான ஐ. எஸ். ஐ. யின் உதவியும் இந்த இந்திய பிரிவினைவாதிகளுக்கு வழங்கப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தேர்தல் கடமைகளில் இறக்கும் அரச ஊழியர்க்கு நஷ்டஈடு

தேர்தல் கடமைகளின் போது உயிரிழக்கும் அல்லது காயமடையும் அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடுகள் வழங்கப்படவுள்ளன.

இது குறித்த புதிய சுற்று நிருபமொன்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல் கடமைகளின் போது மரணமடையும், காயமடையும் அரச ஊழியர்களுக்கு தகுந்த நஷ்டஈடு வழங்கப்படல் வேண்டுமென திணைக்களத் தலைவர்கள் இச் சுற்று நிருபத்தினால் பணிக்கப்பட்டுள்ளனர்.

## 2000 வறிய சிறுவர்களுக்கு தலா 6000 ரூபா சேமிப்பு சான்றிதழ்

ஜனாதிபதி பிரேமதாஸா பதவியேற்று மூன்றாண்டுகள் நிறைவடைவதை யொட்டி கண்டியில் ஜனவரி முதலாம், இரண்டாம் திகதிகளில் நடைபெற உள்ள வைபவங்களின் போது சுமார் 2000 வறிய குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு தலா 6000 ரூபா வைக் கொண்ட சேமிப்பு வைப்பிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

உமவு இயந்திரம்

திராவிட முன்னேற்றக்கழக பாராளுமன்ற உறுப்பினர் வை. கோபாலசாமியைக் கைது செய்யுமாறு தமிழக இந்திரா காங்கிரஸ் இந்திய மத்திய அரசைக் கோரியுள்ளது.

கோபாலசாமி விடுதலைப் புலிகளுக்கு சார்பாக நடந்து கொள்வதாகவும் இதனால் அவரைக்கைதுசெய்து தடுத்து வைக்கவேண்டுமெனவும் இந்திரா காங்கிரஸ் கேட்டுள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்ட கோபாலசாமியின் தம்பியான வை. ரவிச்சந்திரனை பிணையில் விட சென்னை நீதிபதி சித்திக் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணிகளான ரி வி. மதுரநாயகம், ரி வீரசேகரன் ஆகியோரை பிணையில் விட

## பிறந்த நாள் சிறப்பேற்பாடு

பகவான் ஸ்ரீசத்யசாயிபாபாவின் பிறந்தினத்தை யொட்டி கம்பகா ஆலயத்திலி புனருத்தாரணம் செய்யப்பட்டது

இதற்கு ஒரு இலட்சம் ரூபாவுக்குமேல் செலவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஈழம் ஒருநாள் மலர்ந்தே தீரும் என்கிறார் 'சுவாமி'

"என்றோ ஒருநாள் ஈழம் உருவாகத்தான் போகின்றது." என்று சந்திரசேகர் ஆட்சியில் சட்டமந்திரியாக இருந்த டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கூறினார். "தமிழினத்திற்கு எல்லா உரிமைகளையும் வழங்கும் சமஷ்டி ஆட்சி முறை ஒன்றை இலங்கைக்கு இந்தியா வற்புறுத்த இதுவே தக்கதருணம்" என்றும் அவர் சென்னையில் கருத்து வெளியிட்டார். தான் பிரதமர் திரு பி வி. நரசிம்மராவைச் சந்தித்து இவ் விவகாரம் பற்றி பேசியதாகவும் அவர் சொன்னார்.

வும் மறுப்புத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## புனித நீக்கலார் உற்சவம்

யாழ் மறைமாவட்டத்தில் உள்ள இரு புனித நீக்கலார் ஆலயங்களில் ஒன்றான மிருசுவில் புனித நீக்கலார் ஆலய வருடாந்த உற்சவ நவநாள் ஆராதனைகள் கடந்த புதன் கிழமை ஆரம்பமாகி தற்பொழுது தினமும் மாலையில் நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை மாலை வேஸ்பர் ஆராதனை புனித நீக்கலார் இளைஞர் கழகத்தின் சிறப்பு வழிபாடாக இடம் பெறும்.

6ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை திருநாள் கூட்டுத்திருப்பலி, திருச்சொரூப ஊர்வலம் என்பன இடம் பெறும்.

யாழ் தொடர்பகத்தைச் சேர்ந்த அருட்திரு லீனஸ (அ. ம. தி) அடிகளாரும், மிருசுவில் பங்குத்தந்தை அருட்திரு லோரன்ஸ சேவியர் (அ. ம. தி) அடிகளாரும் நவநாள் ஆராதனைகளை நடாத்தி வருகின்றனர்.

யாளர்களுக்கு தகுந்த நஷ்டஈடு வழங்கப்படல் வேண்டுமென

பெற உள்ள வைபவங்களின்

வுள்ளன.

## முல்லைத்தீவு மாவட்ட வெற்றிட விவரம் சேகரிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வெற்றிட விவரங்கள் வடக்கு கிழக்கு மாகாண சபையால் சேகரிக்கப்படுகின்றது.

கே. வி. எம். பெரும்பாக உத்தியோகத்தர். அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூகசேவை உத்தியோகத்தர் போன்ற பதவிகளுக்கான வெற்றிட விவரமே திரட்டப்பட்டுள்ளது. 08

### உழவு இயந்திரம்

அனுராதபுரம், பதுளை, மாத்தளை, மாத்தறை, பொலன்நறுவை, நுவரேலியா மொனறாகலை, காலி, புத்தளம், குருநாகல், கண்டி, அம்பாறை, அம்பாந்தோட்டை திருமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கே இவ் உழவு இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

## 'மனித உரிமை மதிக்கப்படுவதில்லை' இந்தியா மீது கனடா ஐ. நா. சபையில் குற்றச்சாட்டு!

இந்திய அரசின் நடவடிக்கைகளை கனடா ஐக்கிய நாடுகள் சபையில் கண்டித்துள்ளது

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் மனித உரிமை மீறல் செயல்களில் இந்திய இராணுவம் ஈடுபட்டுள்ளதாக கனடா அங்கு குற்றம் சாட்டியுள்ளது.

ஐ. நா. வின் சமூகக்கமிட்டியில் கனேடிய பிரதிநிதி உரையாற்றுகையிலேயே இந்தியா மீது இக்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்.

இக்குற்றச்சாட்டுக்கு இந்திய அரசு விடுத்துள்ள பதிலில் 'எந்த ஒரு நாட்டினதும் சான்றிதழ் இந்தியாவுக்குத் தேவையில்லை' எனத் தெரிவித்துள்ளது.

இக்கூற்று வெளியுறவுக் கொள்கையில் இந்தியா கடைப்பிடிக்கும் புதிய போக்கை வெளிக்காட்டுவதாக உள்ளதாக செய்தி விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

## தூர இட பஸ்சேவை

மட்டக்களப்பு, திருமலை, கண்டி, கொழும்பு பகுதிகளுக்கான தூர இட பஸ் சேவைகள் வவுனியா டிப்போவினால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு
# தேவை: வாரம் 44 லொறி லோட் உணவு
# வருவது: மாதம் 44 லொறிகள் மட்டுமே

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வாரம் ஒன்றுக்கு நிவாரணம் வழங்க சுமார் 44 லொறி உணவுகள் தேவைப்படுவதாக செயலகத் தலைமைக்காரியாலய உதவி அரசாங்க அதிபர் எஸ். சுந்தரன் தெரிவித்தார்.

ஆனாலும் இம் மாவட்டத்திற்கு மாதம் ஒரு முறையே 44 லொறி உணவுகள் எடுத்து வர முடிவதாகவும், ஊரடங்கு அமுல்படுத்தப்படும் வேளையில் இக்குறிப்பிட்ட உணவு எடுத்துவர முடியாதிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஒழுங்கற்ற நிலை காரணமாக தற்போது 10 ஆம் கட்ட நிவாரணமே வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார். (08)

## கொழும்பில் ஆட்டோக்களுக்கும் மீற்றர் அளவுக் கட்டணம்

கொழும்பில் வாடகைச் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்டோக்கள் 'மீற்றர்' அளவுக்கு அமையவே கட்டணங்களை அறவிட வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளது.

அந்த சேவையிலுள்ள வாடகைக்காரர்கள், வாடகை முச்சக்கர வண்டிகள் அனைத்தும் மீற்றர் கருவிகளை பொருத்திக் கொள்ளவும் சட்ட மூலம் கட்டாயமாக்கப்படவுள்ளது.

பிரயாணிகளிடம் கூடுதல் கட்டணம் அறவிடப்படுவதாக கிடைக்கப்பெற்ற பல புகார்களையடுத்தே இந் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

## 2000 தொழிலாளர்கள் தமிழகத்தில் கைது !

பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபடமுயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தமிழகத்தில் சுமார் இரண்டாயிரம் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோன்று இந்தியாவின் பிறமாவட்டங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பலர் கைது செய்யப்பட்டு பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

★ ★

## பொலிஸ் நிலையம் விஸ்தரிப்பு

திருமலை உப்புவெளியில் பெரிய அளவிலான பொலிஸ் நிலையமொன்று தற்பொழுது அமைக்கப்பட்டுள்ளது.

அப் பகுதியில் குடியேற்றப்படும் சிங்களவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகவே இப் பொலிஸ்நிலையம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (08)

## டிசம்பர் 5ஆம் திகதி முதல் மட்டக்களப்பில் தபால் வாரம்

டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால் வாரத்தை அனுட்டிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தபால் வாரத்தினை யொட்டி பாடசாலை மாணவர்கள் மத்தியில் கட்டுரைப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது. மேலும் தபால் பெட்டிகளுக்கு வர்ணம் தீட்டுதல் தபால் நிலையங்களை துப்புரவாக்கும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதுடன் தபால் திணைக்களத்தின் பல்வேறு பணிகள் பற்றிய தகவல்களை பொது மக்களுக்கு அளிக்கும் நிகழ்ச்சிகளும் நடத்தப்படவுள்ளன.

## 325 கோடி ரூபா சீன கடனில் புதிய தபால் பரிமாற்ற நிலையம்

கொழும்பில் சீன உதவியுடன் நவீன தபால் தரம்பிரிக்கும், பரிமாற்ற நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டட அமைப்புக்கு என 325 கோடி ரூபாவினை சீனா நீண்டகால அடிப்படையில் வட்டியின்றிய கடனாக வழங்கவுள்ளது.

20 வருடகாலத்திற்கு அதிகரிக்கும் தேவைகளைப்பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்த தபால் பரிமாற்ற நிலையம் அமைக்கப்படும்.

## 25 பெண்களுக்கு வவுனியாவில் இராணுவப் பயிற்சி

இராணுவத்தின் நாலாவது காலாட்படையைச் சேர்ந்த 25 பெண் இராணுவத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவில் பயிற்சியை முடித்துக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த 25 பெண் இராணுவத்தினரில் ஒருவர் தமிழர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் வவுனியா பகுதியைச் சேர்ந்தவர்களாம்.

## 5-ம் ஆண்டு புலமைப் பரிசில்

1990-ம் ஆண்டு நடைபெற்ற 5-ம் ஆண்டு மாணவர்களான புலமைப் பரிசில் பரீட்சையில் வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த 14 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். (18)

★ ★

கடந்த வருடம் நடைபெற்ற 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில்

## அபிவிருத்திக்கழக அங்குரார்ப்பணம்

வட்டுக்கோட்டைத் தொகுதிப்பிரிவுக்கான 'கல்வி அபிவிருத்திக்கழக' அங்குரார்ப்


## சிறு விளம்பரம்

### சோதிடம்

டிசம்பர் 3 ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரை சோதிட நிலையம் மூடியிருக்கும் உங்கள் பிரச்சினை எதுவானாலும் பிள்ளையார் அருட்சக்தி பொய்யாமொழியாக வழங்குகிறது சாதகத்துடன் நேரில் வரவும். ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீகாவை விநாயகர் சோதிட நிலையம், (ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி) நல்லூர் 12004

### சேவை

ஜி சி பி விவாகப் பொருத்துனர் சேவை நிலையம் இந்து, கிறிஸ்தவ சமயங்களைச் சார்ந்த என்ஜினியேர், எக்கவுண்டன், டொக்டர், பட்டதாரிகள் ஆகியோரது குறிப்புகள் எமது நிலையத்தில் பதிவாகியுள்ளன தொடர்பு- எஸ். ஏ. தர்மலிங்கம் 24, புறூடி லேன், கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம் 12012

### விற்பனைக்கு

நெல் மற்றும் பயிர்கள் அமோக விளைச்சல் தர, பூச்சி புழுக்களிலிருந்து பயிர்களை பாதுகாப்புபெற

### வைத்தியம்

தீவகத்தின் ஊர்காவற்றுறை வேலணை, புங்குடுதீவில் இயங்கிவந்த பாலியம் குழந்தைகள் வைத்தியசாலை தற்காலிகமாக கல்வியங்காட்டிலிருந்து 1 மைல் தொலைவிலுள்ள இருபாலைச்சந்தி குமரபுரம் இலக்கத்துக்கு மாற்றப்பட்டுள்ளது பாலியம் ஊர்காவற்றுறை 12001

### விற்பனைக்கு

ஜி. சி. பி ஆதன கொள்வனவு விற்பனவு நிலையம் எம்மூலமாக பாவனையிலுள்ள திராந்தி, வைரம் பாய்ந்த பனைமரம், இந்தியா ஓடுகள், வீட்டு தளபாடங்கள் ஆகியன உட


ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட எட்டு அதிருப்தியாளர்கள் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு உயர்நீதி மன்றத்தினால் டிசம்பர் 3 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. அவர்களின் நிலைப்பாடுகள் செயற்பாடுகள் தொடர்பான தொகுப்பு இங்கு தரப்படுகிறது.

## பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய நிலை ஏற்படுமா?

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட எட்டு உறுப்பினர்களை "எட்டு மதம் பிடித்த யானைகள்" என ஜனாதிபதி வர்ணித்திருக்கிறார்.

இவர்களை "அதிருப்தியாளர்கள்" எனப்பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன. புரட்சியாளர்கள் என அரசியல் கட்சிகள் நாமகரணம் சூட்டியுள்ளன.

ஐ. தே. கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து அவர்களின் மனு மீதான தீர்ப்பு டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

தீர்ப்பு இவர்களுக்குப் பாதகமாக அமைந்தால் அரசியலில் அவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக இருக்கும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து மட்டுமன்றி பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழக்க நேரிடும். ஐ. தே. க. புதிய எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களை நியமிக்கும். பாராளுமன்ற ஆட்சிக்காலத்தில் இந்தக் குழுவின் முக்கியத்துவம் குறைந்து போகும்.

வழக்கின் தீர்ப்பு இவர்களுக்குச் சாதகமாக அமைந்தாலும் சில பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரும். இவர்கள் தொடர்ந்து பாராளுமன்றத்தில் இருப்பினும் திரிசங்கு சொர்க்க நிலைக்குத் தள்ளப்படுவார்கள்

### கண்டிக்க முடியாது

ஏனெனில் இவர்கள் கட்சிக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டி ஏற்படுவதோடு, ஜனாதிபதி ஆட்சி முறையையும் ஏற்க நேரிடும். அப்படியான சூழ்நிலையில் இவர்கள் மேடை போட்டு அரசைக் கண்டிக்கவும் முடியாது.

இவர்கள் கட்சியிலும் பாராளுமன்றத்திலும் இருந்து கொண்டு தங்கள் உடன்பாட்டை வெளியிடமுடியாத நிலையில் மூன்று வருடங்கள் காத்திருத்தல் வேண்டும். ஏனெனில் ஜனாதிபதி இன்னும் மூன்று வருடகாலம் பதவியில் இருப்பார்.

### மாற்று வழி

இந்த இக்கட்டான நிலைக்கு மாற்று வழியும் உண்டு.

வழக்கில் வெற்றி பெறும் பட்சத்தில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு மக்கள் முன் செல்வதே அது.

அதிருப்தியாளர்களுடைய முக்கிய குறிக்கோள் ஜனாதிபதி தேர்தல் முறையை அகற்றுவதே. இந்தக் குறிக்கோளை எய்துவதற்கு அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒரேவழி தனியாக ஒரு கட்சி அமைப்பதாகும்.

### புதிய முன்னணி கழுகுச் சின்னம்

இவ்விடயங்கள் யாவற்றையும் ஆராய்ந்த லலித் குழுவினர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இந்த அமைப்பிற்கு ஒரு கொடியும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பச்சை நிறத்திலான கொடியில் கழுகுச்சின்னம் பதிக்கப்பட்டிருக்கும்.

சர்வோதயத் தலைவரின் பங்களிப்பும் இப்புதிய அமைப்பு உருவாக்குவதில் இருக்கின்றது. அவரே லலித் குழுவினருக்கு கிரக மாற்றங்கள் பற்றியும், அதன் பலனாக திடீர் தேர்தல் வரும் சாத்தியக் கூறுகள் பற்றியும் கூறியுள்ளார். அவரின் கணிப்புப்படி அடுத்தவருடம் மே மாதம் பெரிய அரசியல் மாற்றங்கள் நிகழலாம்.

ஐ தே. கட்சியை விட்டுப் பிரிந்தவர்களுக்கு வேறொரு கட்சியின் ஆதரவும், தேவைப்பட்டது எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இவர்கள் நாடினார்கள். இவ்விடயமாக அவர்கள் அனுராவுடன் நடத்திய பேச்சுக்களின் பின் ஐ. தே. கட்சியை எதிர்ப்பதற்கு ஒரு பொது முன்னணி அமைப்பதற்குத் தீர்மானித்தனர்

பூச்சி புழுக்களிலிருந்து பயிர்களை பாதுகாப்புபெற உள்ளூர் உற்பத்திஇயற்கை நீமியா உரம். அன்னார கோட்பி கடைகளிலும் கிடைக்கிறது மிக்கிலைத்

12008

தியா ஒழுகன், வீட்டு தள பாடங்கள் ஆகியன உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு ஏ. தர்மலிங்கம்24, புறாத்லேன், கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணம். 12011

தணிப்பிரிவுக்கான'கல்வி அபிவிருத்திக்கழக' ஆசிரியர்களுக்கான பொதுக்கூட்டம் வண்ணார்பண்ணை ஒக்கோட்டை இந்துக்கல்லூரியில் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் உரும்பிராயக் கோத்தணியைச்சேர்ந்த இருபத்தைந்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். (35)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம் பெரும் பாகம், 1992-ம் ஆண்டு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும் தெல்லிப்பழை, சாவகச்சேரி, கிளிநொச்சி, ஊர்காவற்துறை, புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளுக்கும் அழுக்குத்துணி சலவை செய்வதற்கான கேள்விகள் 1991-ம் ஆண்டு டிசம்பர் 18-ம் திகதி (18 12 91) முற்பகல் 10 மணி வரை சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்கள் அறிய விரும்புவோர் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டாக்டர். ந. கனகசபை,
சு. சே. பி பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

59, விக்டோரியா வீதி,
சு சே. பி. ப. பணிமனை,
யாழ்ப்பாணம்,
26 11. 1991

12002

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## சுகாதாரத் திணைக்களம்
## யாழ்ப்பாணம் பெரும்பாகம்

1992ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1991ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி (18. 12. 1991) மு. ப. 10. 00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்,

மேலதிக விபரங்கள் தெரிய விரும்புவோர் இக்காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

டாக்டர் ந. கனகசபை,
சு சே. பி. பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

59, விக்டோரியா வீதி,
சு. சே. பி. ப. பணிமனை,
யாழ்ப்பாணம்,
26. 11. 1991.

12003

சியை எதிர்ப்பதற்கு ஒரு பொது முன்னணி அமைப்பதற்குத் தீர்மானித்தனர்

## முக்கிய கொள்கைகள்

இந்தப் பொது முன்னணியின் முக்கிய கொள்கைகள்.
(1) நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவது.
(2) ஜனநாயக ஆட்சியை மீண்டும் கொண்டு வருவது.
(3) இனப்பிரச்சினைக்கு இறுதியான தீர்வு காண்பது

அதிருப்தியாளர்கள் அனுராவுடன் மட்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த வேளையில் ஸ்ரீமாவோவினுடைய ஆதரவையும் நாட வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவர்கள் தயாரித்த வரைபில் ஜனாதிபதி தெரிவு விடயம் சரியான முறையில் அமையவில்லை. ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ள அதேவேளை அவர் மக்களால் தெரிவு செய்யப்படுவார் எனக்கூறப்பட்டிருந்தது.

ஸ்ரீமாவோவின் தலைமையின் கீழ் பணியாற்ற பல அதிருப்தியாளர்கள் விரும்பாத போதும், அவரது கருத்துக்களை அறிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உள்ளே நிலவும் அமைதியற்ற சூழ்நிலையினால் லலித் குழுவினருடன் ஸ்ரீமாவோ ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர முடியாத சூழ்நிலை நிலவுகின்றது. அத்துலத்முதலி அனுராவுடனும் சந்திரிகாவுடனும் தனித்தனியாக பேச்சுவார்த்தை மேற்கொண்டுள்ளனர்.

திடீர் தேர்தல் எப்போது வரலாம் என்ற எண்ணத்திலேயே லலித் குழுவினரும் ஸ்ரீமாவோவும் செயல்படுகின்றனர்.

## இக்கட்டத்தில் ஜனாதிபதியும்

ஜனாதிபதி கூட இக்கட்டான நிலையில் இருக்கிறார். பாராளுமன்றத்தில் வெளிப்படையாகவே அவரை எதிர்த்து நிற்கும் குழுவினர் ஒருபுறம், மறைமுகமாக எதிர்க்கும் சிலர் ஒருபுறம். எதிரிகளைத் தனது கூட்டினுள் வைத்துக்கொண்டு நிம்மதியாய் இருக்க முடியாது.

இந்நிலையில் தேர்தலைத் தவிர அவருக்கு வேறு மார்க்கம் இல்லை.

# ரயில்வே திணைக்களத்தையும் தனியார் மயமாக்கத் திட்டம்

ரயில்வே திணைக்களமும் தனியார் மயப்படுத்தப்படலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து சர்வதேச அபிவிருத்திக் கழகம் (IDA) ஸ்ரீலங்கா அரசிடம் வற்புறுத்தல் செய்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா ரயில்வே திணைக்களம் தற்பொழுது எதிர்நோக்கும் பெரும் நிதி நெருக்கடி திணைக்கள வளர்ச்சியை பாதிக்கத் தொடங்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சர்வதேச அபிவிருத்திக் கழகம் ஸ்ரீலங்கா ரயில்வேக்கு கடந்த ஐந்து வருடங்களாக சுமார் 16 பில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கிவந்துள்ளது.

ஆனால் இதே காலப்பகுதியில் ஸ்ரீலங்கா ரயில்வே 3 பில்லியன் ரூபாவையே மொத்த லாபமாக பெற்றதாக சுட்டிக்காட்டப்படுகிறது. ஸ்ரீலங்கா அரசுக்கும் ஐ. டி. ஏ க்கும் இடையில் தற்போது ரயில்வே சேவையை லாபகரமாக நடாத்துவது குறித்து ஓர் இணக்கம் ஏற்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை ரயில் சேவையை தனியார் மயப்படுத்தும் எண்ணம் ஏதும் அரசுக்கு இல்லை. என பிரதமர் டி. பி. விஜேதுங்க சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் அறிக்கை விடுத்திருந்ததையும் குறிப்பிடத்தக்கது.

அரசு ஏற்கனவே இ. போ. சபையை மக்கள்மயப்படுத்தியுள்ளதும் தெரிந்ததே.

## சைக்கிள் கொண்டுவரத் தடை பற்றறி கடத்தல் காரணம்

வவுனியாவுக்கு அப்பால் வடபகுதி நோக்கி சைக்கிள்களைக் கொண்டுவரத் தடை செய்யப்பட்டதற்கு பற்றறி கடத்தலே முக்கிய காரணம் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கொழும்பு, வவுனியா பகுதிகளில் சைக்கிள்களைப் புதிதாகக் கொள்வனவு செய்வோர் அவற்றைப் பகுதி பகுதியாக கழற்றி பற்றறிகளை உள்ளே பொருத்தி மீண்டும் சைக்கிளாக பொருத்தி கடத்தி வருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால் இந்தத் தடை விதிக்கப்படுவதாக அச் செய்திகள் தெரிவித்தன.

அண்மையில் சிலர் சைக்கிள் பார்களுக்குள் பற்றறி கடத்தி வந்தபோது படையினரிடம் வவுனியாவில் அகப்பட்டதும் தெரிந்ததே. (06)

## பிறப்புச்சான்றிதழ் படிவங்கள் அடுத்த கப்பலில் வரவுள்ளன

யாழ் மாவட்டத்துக்குத் தேவையான உணவு முத்திரைகள் மற்றும் பிறப்புச் சான்றிதழ் படிவங்கள் அடுத்து வரும் கப்பலில் ஓரளவு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

சம்மந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுடன் யாழ் அரசாங்கஅதிபர் க. மாணிக்கவாசகர் நேரடியாகப் பேச்சு நடாத்தியதையடுத்து இவை அனுப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ் செயலக மேலதிகப் பதிவாளர் அலுவலகத்தில் ஆயிரக்கணக்கான பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பங்கள் தேங்கியுள்ளன. (06

## வடக்கே மின் விநியோகம் கொழும்பில் பேச்சுவார்த்தை

இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் திரு. கந்தசாமி எதிர்வரும் செவ்வாய்க் கிழமை கொழும்பு செல்லவுள்ளார்.

வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பாக கொழும்பில் உயர் அதிகாரிகளுடன் இவர் பேச்சு நடாத்தவுள்ளார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் மூலம் இவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மின்சார விநியோகம் நடைபெறுவதற்கு முன்னர் இடம்பெறும் திருத்த வேலைகள், தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பாக இவர் பேச்சு நடாத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (06)

## யாழ் பிரதம தபாலகத்தில் விலாசம் தெளிவில்லாததால் அனுமதி அட்டைகள் தேக்கம்

எதிர்வரும் க. பொ. த. பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் தற்போது யாழ் பிரதம தபால் ஊழியர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதில் பெரும்பாலான அனுமதி அட்டைகள் தெளிவாக விலாசங்கள் குறிக்கப்படாததினால் தபால் சேவகர்களினால் விநியோகிக்க முடியாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கத்தவறியவர்கள் உடனடியாக யாழ் பிரதம தபாற்கந்தோரில் வேலை நாள்களில் காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ் பிரதம தபால் உயரதிகாரி அறிவித்துள்ளார். ( 06)

## குடிமனைக்குள் புகுந்து குரங்குகள் சேஷ்டை

வடமராட்சி இழக்குப்பகுதியான உடுத்துறை வடக்கு ...

பிற இடங்களில் இருந்து வந்து அப் பகுதியில் திரிவதா...

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் சந்திரிகா சேர்ந்தார்

ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் மகள் திருமதி சந்திரிகா விஜயகுமாரரணதுங்கா நேற்று மாலை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்தார்.

இவரை சுதந்திரக்கட்சியில் சேர்ப்பதற்கு நீண்டகாலமாகவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தபோதும் அனுரா பண்டாரநாயக்காவின் போக்கினால் சந்திரிகா சுதந்திரக்கட்சியில் சேருவது தாமதப்பட்டது. இப்போது அனுரா பண்டாரநாயக்கா ஆட்சேபிக்கவில்லை யெனத் தெரியவருகிறது.

சந்திரிகா சுதந்திரக் கட்சியில் சேர்ந்து கொண்டபின்பு கட்சியில் பிளவு ஏற்படக்கூடுமென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் பட்டினியை ஒழிக்கவும், விலைவாசி உயர்வைத் தடுக்கவும், பிரச்சினைகளைத் தீர்க்கவுமே தான் சுதந்திரக் கட்சியில் சேர்ந்ததாக சந்திரிகா பி. பி. சிக்கு தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியில் சேர்ந்து ஐ. தே. கட்சியைத் தோற்கடிக்கப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் லலித்-காமினி குழுவினரையும் சந்தித்ததாகவும் தெரியவருகிறது.

## உணவு விநியோக கூட்டம்

காங்கேசன்துறை துறைமுகத்தின் மூலம் யாழ் மாவட்டத்துக்கு உணவுப் பொருள்களை விநியோகிப்பது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளுக்கும் யாழ் அரசாங்க அதிபருக்கும் இடையில் நாளை திங்கட்கிழமை பேச்சுக்கள் நடைபெறவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (06)

## இன்று கலந்துரையாடல்

மக்களுறவுக்கொள்கை முன்னெடுப்பு பிரிவினரின் யாழ் மாவட்டத்தில் வட்டவாரியில் அமைக்கப்பட்டுள்ள பிரச்சாரக் குழுக்களிற்கான கலந்துரையாடல் நிகழ்வு இன்று மாலை 3 மணிக்கு கோண்டாவில் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல பிரிவுகளிலுமுள்ள பிரச்சாரக் குழு உறுப்பினர்களும் இந்நிகழ்வில் தவறாது ...

## சுவாமிகள் குருபூசை

மகாகவி பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சுவாமி எனப்படும் அருளம்பல சுவாமிகளின் குருபூசை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை வியாபாரிமூலையில் உள்ள சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணத்துச் சுவாமி ...

## யாழ் கூட்டுறவுச் சங்க ஊழியருக்கு ஆறுமாத அபாயப்படி

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் அனைவருக்கும் ஆறுமாத அபாயப்படி வழங்கப்பட்டுள்ளது.

நெருக்கடியான இன்றைய சூழ் நிலையில் சங்க ஊழியர்கள் பொதுமக்களுக்கு ஆற்றிய சேவையை மதித்து இக் கொடுப்பனவு உடனடியாக வழங்கப்பட்டதாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கு. சிறில் தெரிவித்தார்.

வடபகுதியில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மட்டுமே ஆறுமாத அபாயப்படியை ஊழியர்களுக்கு வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (14)

## ஊரடங்குச் சட்டத்தால் பரீட்சையும் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்து வருவதால் வகுப்பேற்றப் பரீட்சைக்கு தோற்ற முடியாதிருப்பதாக மரணவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பகுதிகளில் ஆங்காங்கே குண்டு வீச்சுச் சம்பவங்களும், இராணுவ நடவடிக்கைகளும் நடைபெற்று வருவதால் இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு மாணவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். 08

## 450 ரூபா செலவில் அன்புலன்ஸுக்கு டீசல்

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதலின் போது காயப்பட்டவரான செபஸ்தியான் சிவஞானம் என்பவரை சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுவருவதற்கு சாவகச்சேரி அம்புலன்ஸில் டீசல் இல்லாத நிலையில் நோயாளியை யாழ்ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல காலதாமதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அன்புலன்ஸிற்கு டீசல் இல்லாத நிலையில், காயம் பட்டநோயாளியே தனது 450ரூபா பணத்தில் டீசலை வாங்கிக்கொடுத்தே அவர் இங்கு கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 07

## சனசமூக நிலையங்களுக்கு நன்கொடைப் பணம்

யாழ் மாநகரசபைப் பகுதி சனசமூகநிலையங்களுக்கு இவ்வாண்டுக்கான அரச நன்கொடைப்பணமாக 37,200 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நன்கொடைப் பணம் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் யாழ் மாநகரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நன் கொடைப்பணம் பகிர்ந்தளிக்கப்படும்.

யாழ் மாநகர எல்லைக்குள் இருக்கும் சனசமூக நிலையங்கள் தமக்குரிய 1991ம் ஆண்டிற்கான அரச நன்கொடைப் பணத்தை யாழ் மாநகர சபையிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் ...

வடமராட்சி கிழக்குப்பகுதியான உடுத்துறை வடக்கு ஆழியவளைப் பகுதிகளில் குரங்குகள் அங்குள்ள பிரயோசனம் தரும் மரங்களை சேதப்படுத்துகின்றன.

பிற இடங்களில் இருந்து வந்து அப் பகுதியில் திரிவதாகவும் இவை குடிமனைக்குள் புகுந்து பொருள்களை சேதப்படுத்தி வருகின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 07

# முன்னாள் செயலர் நாகராஜன் நீதிமன்றத்தில் வாக்குமூலம்

தமிழ் நாடு அரசின் முன்னாள் உள்துறை செயலாளர் பி. நாகராஜன் நேற்று நீதிமன்றத்தில் ஒ புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அன்றைய முதலமைச்சர் கருணாநிதி, தலைமைச் செயலர் ஆகியோரின் உத்தரவின் படி தான் அன்று செயற்பட்டதாகவும் அவர் நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

இந்திய இராணுவம் சென்னைக்கு வந்தபோது கருணாநிதி வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மறுத்ததாகவும் அவர் கூறிப்பிட்டார்.

சில விடயங்களில் முதலமைச்சர் கருணாநிதி தலையிட்டதாகவும் நாகராஜன் சொன்னார்.

நீதிமன்ற வாக்குமூலத்தைப் படுத்து நாகராஜன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இவர் இம்மாதம் 21ஆம் திகதி தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

---

சவச்சாலை...

போதாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஆஸ்பத்திரியில் மரணமாகும் நோயாளிகளின் சடலங்களை அதிக நாள்களுக்கு வைத்திருக்க முடியாதிருக்கின்றதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. 07

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி 'லஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 01. 12. 1991இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

லகத்தில் நடைபெறவுள்ளது.

சகல பிரிவுகளிலுமுள்ள பிரச்சாரக் குழு உறுப்பினர்களும் இந்நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்பு பிரிவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

---

காரைநகரில்...

அதே சமயம் காரைநகரிலிருந்து கடற்படைக்குச் சொந்தமான கடற்படைப் படகுகள் பொன்னாலைப் பகுதியினை நோக்கி பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டன. (7,6

---

புலிகளின்...

- ரீ 81 ரக துவக்கு - 2
- ரீ. 81 ரவைக்கூடுகள்
- 7,62 நடுத்தர ரவைகள் 1739
- கைக்குண்டுகள் - 6

கொடிகாமத்தில் புலிகளின் தாக்குதலையடுத்து மற்றொரு இராணுவ அணி காட்டுப்பகுதியூடாக வந்தபோதும் புலிகள் அவர்களுடனும் மோதினர் இங்கும் பல படையினர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சில இராணுவத்தினர் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சமாதி ஆலயத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபையின் தலைவராகிய டொக்டர் எம். கே முருகானந்தனும், செயலாளர் திரு. கி. சிவநேசனும் இக் கூட்டத்தில் உரையாற்றுவார்கள்.

---

ஆம்..

பரீட்சைக்கும் தோற்றினர் இவர்களுக்கு இதுவரை பதவி உயர்வு கிடைக்காது அமைய ஊழியர்களுக்குப்பதவி உயர்வு வழங்கப் படட்டதை ஆட்சேபித்து உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு மகஜர் அனுப்பி உள்ளனர். 14

---

செஞ்சிலுவை...

செல்லப்படுகையில் வழியில் மரணமானார்.

இவரது கணவரான இராஜரட்ணம் ஜனரட்ணம் (40) மகளான செல்வி தேமினி குணரட்ணம் (8) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

மோட்டார் சைக்கிளில் மூவரும் மெதுவாக ஓட்டிவந்த போது இலங்கை செஞ்சிலுவைச்சங்க கொறி மோதி ஒருவரை பலிகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (07)

இந் நன்கொடைப் பணம் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் யாழ் மாநகரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரச நன்கொடை பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இப் பணத்தினை யாழ் மாநகர சபையிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் கோ தியாகராசா அறிவித்துள்ளார். 14

# பொலிஸில் பதிவு செய்து வெளியேறவேண்டும்

அக்கரைப்பற்றுப் பகுதியில் இருந்து வெளியே செல்லும் தமிழ் முஸ்லிம் மக்கள் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து அனுமதி பெறவேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

தமது வேலைகளின் நிமித்தம் தமது பகுதியை விட்டுச் செல்லும் போதும் அக்கரைப்பற்று சந்தை சதுக்கத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தில் பெயர் முகவரிகள் பதிவு செய்த பின்னரே இவர்கள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். (08)

---

## தாய்லாந்து பயணம்

ஆசிய தொழில் நுட்ப நிறுவனத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பேரழிவுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான முகாமைத்துவ பயிற்சி நெறியில் கலந்துகொள்ளும் வகையில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் திட்ட இயக்குநர் த லங்காநேசன் தாய்லாந்து பயணமானார்.

கடந்த ஆண்டு இலங்கையில் நடைபெற்ற இந்தப் பயிற்சிக் கருத்தரங்கின் தொடர்ச்சியாக ஆறு வாரங்கள் தொடர்ந்து இப் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

## சீனாவில் எயிட்ஸ்

சீனாவில்சுமார் 500பேருக்கு எயிட்ஸ் நோய் பீடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தலைநகர் பீகிங்கில் இதற்கான வைத்தியப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

சீனா - பர்மா எல்லைப் பகுதியில் இடம்பெறும் போதைவஸ்து கடத்தலே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.